2012 அக்டோபர் 31]

பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான குடந்தை, விவசாயம் நிறைந்த பகுதி. எனவே, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு கரும்பு வெட்டும் இயந்திரமும், அதுபோல கதிரடிக்கும் இயந்திரமும், நடவு நடும் இயந்திரமும், உழவடிக்கும் டிராக்டர்களும் கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக 5 டிராக்டர்களும், 10 நெல் அறுவடை இயந்திரங்களும் வாங்க இருக்கின்றோம். அப்படி வாங்கும்போது உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

வன உரிமைக் குழுக்கள்

***7903—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வனக் கோட்டத்தில் மலைவாழ் மக்கள் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2012 அக்டோபர் 31

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 15 கான் குடியிருப்புகளில் கிராம சபைகள்மூலம் 6 கான் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய கான் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் அமைக்கும்வண்ணம் வன உரிமைச் சட்டம் தொடர்பான முழு விவரங்களும் மலைவாழ் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த கான் குடியிருப்புகளில் சில அமைப்புகள், உள்ளாட்சி நிருவாகம் மூலமே வன உரிமை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என மலைவாழ் மக்களிடம் கூறி வருகின்றன. இதனால் இக்குடியிருப்புகளில் உடனடியாக வன உரிமைக் குழு அமைக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தாலுகாவில் இருக்கக்கூடிய வனப் பகுதியில், 18 செட்டில்மென்ட்டுகளில் 5 செட்டில்மென்ட்டுகளில் ஏற்கெனவே குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மீதியிருக்கக்கூடிய 13-ல் குழு அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதுமட்டுமல்ல, அதிகாரிகளே வனக் குழுக்களுக்கான பெயர்களை தயார் செய்து, அவர்களிடத்திலே படித்து கையெழுத்து வாங்குகின்ற முறையிலேதான் அந்தக் குழுக்கள் அமைக்கபடுகின்றன. எனவே, மீதியிருக்கக்கூடிய செட்டில்மென்ட்டுகளிலும் அந்த வனக் குழுக்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். புலிகள் காப்பகம் என்ற பெயரால் எந்த வளர்ச்சி வேலைகளையும் செய்வதில்லை. குடிதண்ணீர் வசதிகூட அமைக்கப்படுவதில்லை. இதில் கவனம் செலுத்தப்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 அக்டோபர் 31]

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை புலிகள் காப்பகம், திருப்பூர் வனக் கோட்டத்தில் உள்ள குடியிருப்புகளில் புலையர், முதுவர், இரவலார் என்னும் இன மக்கள் வசித்து வருகின்றனர். வன உரிமைச் சட்டம், 2007, பிரிவு 2, உட்பிரிவு (ஜி)-ன்படி கிராம சபைமூலம் விண்ணப்பம் பெற அங்கீகாரம் அளிக்கும்படி மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு உரிய முன்மொழிவுகள் மாவட்ட வன அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளன.

கிராம சபை எனப்படும் இம்மக்களின் கூடுகை மூலம் அமைக்கப்பட்ட வன உரிமைக் குழு மூலம் உரிமை அமைக்க விண்ணப்பங்கள் பெறவும் அவற்றினை பரிசீலனை செய்து உட்கோட்ட அளவிலான குழுவிற்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலே மொத்தம் உள்ள 15 கான் குடியிருப்புகளில் ஆறு கான் குடியிருப்புகளில் கிராம சபைகள்மூலம் வன உரிமை குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய கான் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் அமைக்கும்வண்ணம், மலைவாழ் மக்களிடம் வன உரிமைச் சட்டம் தொடர்பாகவும், வன உரிமைக் குழுவின் முக்கியத்துவம் குறித்தும், அதனுடைய பயன்கள் பற்றிய உரிமை பட்டா வழங்கும் முறைகள் குறித்தும் ஆதி திராவிடர் நலத் துறை, வனத் துறைமூலம் தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. உள்ளூர் மக்கள் ஒப்புதலுடன் மீதம் உள்ள ஒன்பது கான் குடியிருப்புகளிலும் வன உரிமைக் குழுக்கள் அமைக்க தேவையான தொடர் நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. மீதம் இருக்கக்கூடிய செட்டில்மென்ட்டுகளிலும் குழுக்கள் அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். அதேசமயத்தில் அங்கு மனுக்கள் கொடுத்து கிராம சபைகள்மூலம் தேர்ந்தெடுக்கிற முறை ஏன் இல்லை என்பதை ஆய்வு செய்யவேண்டும். சமவெளிப்பகுதியான கீழே இருந்து அதிகாரிகள்

மூலமாக அது அமைக்கப்படுகிறது. மேலே மனுக்கள் கொடுத்து ஜனநாயக முறையிலே அது நடைபெறுவது இல்லை. அதை ஆய்வுக்குட்படுத்த வேண்டும் என்பதை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

தூர் வாருதல்

***19762—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலுள்ள வாய்க்கால்களைத் தூர் வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின்மூலம் ஆண்டுதோறும் வாய்க்கால்களைத் தூர் வாருவதற்கு நிதிகள் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல இந்த ஆண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி என்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலுள்ள வாய்க்கால்களைத் தூர் வாருவது சம்பந்தமாக, அந்தப் பகுதியில் மொத்தம் 43,000 ஏக்கர் பாசன பகுதிகளாக உள்ளன. மூன்றாவது கிளை வாய்க்கால்களில் 5,500 ஏக்கர் பாசனம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அங்கே இருக்கக்கூடிய மூன்றாவது கிளை வாய்க்கால்களில் வேட்டைக்காரன்புதூர், காளியாபுரம்,*